06 வருட காலமாக வெற்றிகரமாக இயங்கி வரும் கல்வி நிறுவனம்

ZOOM ONLINE CLASS

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## தரம் 06

முதலாம் தவணை

**அலகு 03 – ஏமாந்த நாய்**




தமிழ் ஆசான்

"அகரம் தினேஸ்"

SLTS, BA (honours) IN TAMIL DIP IN G/D & ARTIFICIAL INTERLLIGENCE

## ஏமாந்த நாய்

பிள்ளைகளே கதை கேட்பதென்றால் சிறியவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை எல்லோருக்கும் விருப்பமான ஒரு விடயம் ஆகும். ஒருவர் கதையைப் பிறர் நயக்குமாறு சொல்வதற்குப் பயிற்சி வேண்டும். ஏன் என்றால் கதையில் சம்பவத்துக்கு ஏற்ப தொனிவேறுபாடு (பேசும்) ஏற்ற இறக்கத்தோடு இருத்தல் வேண்டும். கதை கூறும்போது கூறுபவர் மெய்ப்பாடு தோன்றக் கூறும்போது கதையைக் கேட்பவர் கதைச் சம்பவத்துடன் லயித்து விடுகின்றார். கதை கூறும்போது பின் சொல்வதை முன்பு சொல்லியும் ஒருமுறை கூறியதை மறுமுறை கூறி நின்றும் கேட்பவருக்கு வெறுப்பை ஏற்படுத்தக் கூடாது.

அதே போன்று கதையை வாசிக்கும் போதும் அவசரப்பட்டு வாசிக்காது சம்பவங்களைத் தெளிந்து வாசித்தல், கதையின் ஆரம்பம். நடக்கும் இடம்(களம்) கதாபாத்திரங்கள், அவற்றின் இயக்கம், எதிர்பார்ப்பு முடிவு, படிப்பினை போன்ற பல்வேறு விடயங்களில் நாம் கவனமும் ஈர்ப்பும் கொண்டிருத்தல் வேண்டும்.எமது வாசிப்பின் தன்மையைப் பொறுத்தே கதை சுவாரசியம் மிக்கதாக அமையும். குழந்தைகளுக்குக் கதை கூறுவதற்குப் பாட்டி அல்லது வயது சென்றவர்கள் பொருத்தமானவர்கள் தான். ஏனென்றால் அவர்களின் அனுபவமும், பக்குவமும் கதை கூற வைக்க உதவும். அவ்வகையில் இங்கே தரப்பட்டுள்ள “ஏமாந்த நாய்” என்ற கதையை மெய்யுணர்வுடன் வாசிப்போம். அக்கதையின் ஊடாகத் தெளிவுபடுத்தப்பட்ட நாம் பல்வேறு படிப்பினைகளை அறிவோம்.

இக் கதையை எழுதிய கதாசிரியர் செ. கணேசலிங்கம் அவர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்.

**‘பிறரை வஞ்சிக்க நினைப்பின் தானே வஞ்சிக்கப்படுவான்”**

Agaram Dhines

**அ. பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளி நிரப்புங்கள்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒளி | அளையில் | ஒலி | அலைந்து | அழைத்து | ஆணையை |

1. அரசனின் ………………….. மீறி நடந்தோர் தண்டிக்கப்பட்டனர்.
2. நண்டு ………………………வாழும் பிராணி ஆகும்.
3. பல கிராமங்களுக்கு இன்னும் மின்சார……………… கிடைக்கவில்லை.
4. பால்மா வாங்குவதற்கு மக்கள் கடைக்குக்கடை…………………… திரிந்தனர்.
5. மணமக்களை ஊர்வலமாக………………….. வந்தனர்.
6. காலை வேளையில் பறவைகளின்…………………… இதயத்தைத் தொட வல்லன.

**ஆ. கீறிடப்பட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புங்கள்.**

1. சமையற்காரன் விறகு எடுப்பதற்குக் கீழே.......................................
2. காகம் மற்றக் காகங்களையும் அழைத்து போட........................... எண்ணியது.
3. .................................... குஞ்சைக்கூட நீதான் அடைகாப்பாய்.
4. எல்லோரும் ஒன்று சேர்ந்து இந்த வடையைப் .......................... சாப்பிடுவோம்.
5. ................................. நாய் தலை குனிந்தபடி சென்றது.

**இ. தடித்த எழுத்தில் உள்ள சொற்களுக்கு ஒத்தகருத்துச் சொல் எழுதுக.**

1. வடையைப் பறிக்க **எண்ணியது** .................................
2. காக்கைகள் எல்லாத் **திசைகளில்** இருந்தும் வந்தன. ...................................
3. மற்றக் காகங்களையும் **அழைத்தது.** ...............................
4. இந்த வடையைப் பகிர்ந்து **உண்ணுவோம்.** ................................
5. காகம் **சொல்லிக்** கொண்டே எச்சமிட்டது. .......................................

**ஈ. பாடப்புத்தகத்தின் உதவியுடன் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. காகம் வடையைக் கொத்திக் கொண்டு பறப்பதற்கு எச்சந்தர்ப்பம் வாய்ப்பாகக் கிடைத்தது?
   ..........................................................................................
2. வேப்பமரத்தில் உட்கார்ந்த காகத்தின் யோசனை என்ன?
   ..........................................................................................
3. அண்ணாந்து மேலே பார்த்த நாய்க்கு ஏற்பட்ட எண்ணம் என்ன?
   ..........................................................................................
   ..........................................................................................
4. நாய், காகத்தை எப்படிப் புகழ்ந்தது? எதைச் செய்யும்படி கேட்டது?
   ..........................................................................................
   ..........................................................................................
5. பாட்டுப்பாடும்படி கேட்ட நாய்க்குக் காகம் கூறிய பதில் என்ன?
   ..........................................................................................
   ..........................................................................................
6. காகத்திடம் காணப்பட்ட ஒற்றுமை உணர்வுடன் கூடிய பண்பு என்ன?
   ..........................................................................................
7. நாய் ஏன் தலை குனிந்து சென்றது?
   ..........................................................................................
8. இக்கதையின் மூலம் எமக்குக் கிடைக்கும் படிப்பினைகள் என்ன?
   ..........................................................................................
   ..........................................................................................

Agaram Dhines

**உ. கீழே தரப்பட்டுள்ள ஒரு பொருள் பன்மொழியினுள் பொருத்தமற்ற சொல்லின் கீழ் கீறிடுங்கள்.**

1. கூடுதல், திரளுதல், பிரிவு, சேர்தல்
2. விருப்பம். வாஞ்சை, கேடு, அவா
3. வைகறை, விடியல், அஸ்தமனம், புலரி
4. சூரியன், பகலவன், வெய்யோன், மதி
5. ஆவல், வேதனை, துன்பம், அல்லல்

**ஊ. பின்வரும் சொற்களைத் தொடர்புபடுத்துங்கள்.**

| | |
|---|---|
| 1. சிறுமை | நகைப்பு |
| 2. எள்ளல் | வயல் |
| 3. இடும்பை | கீழ்மை |
| 4. புலம் | தேவர் |
| 5. மாண்பு | துன்பம் |
| 6. விண்ணவர் | சிறப்பு |

Dhines

## படிப்போம், பழகி எழுதுவோம்

### தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்கள்

**இரு வகைப்படும்.**

1. முதலெழுத்துக்கள்
2. சார்பெழுத்துக்கள்.

**1. முதலெழுத்துக்கள்**

உயிர் எழுத்துக்கள் - 12
மெய் எழுத்துக்கள் - 18
ஆகவே முதல் எழுத்துக்கள் 30 ஆகும்.

**2. சார்பெழுத்துக்கள்**

ஆய்த எழுத்து - 01
உயிர் மெய் எழுத்துக்கள் - 216

**படிப்போம், பழகி எழுதுவோம்**

## தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்து வகை

### முதலெழுத்துக்கள்

1. உயிர் எழுத்து :
   அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ - 12 எழுத்துக்கள்.

2. மெய்யெழுத்து
   க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் - 18 எழுத்துக்கள்.

3. ஆய்த எழுத்து :
   ∴ - 1 எழுத்து

4. குறில் அல்லது குற்றெழுத்து :
   அ, இ, உ, எ, ஒ - 5 எழுத்துக்கள்.

5. நெடில் அல்லது நெட்டெழுத்து :
   ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ - 7 எழுத்துக்கள்.

6. உயிர் மெய் எழுத்துக்கள் 216 ஆகும்.

### தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துக்கள்

**12 + 18 + 1 + 216 = 247**

7. மெய் எழுத்துக்கள் ஆறு வகைப்படும்.

மெய் எழுத்துக்கள்
- வல்லெழுத்துக்கள்
- மெல்லெழுத்துக்கள்
- இடையெழுத்துக்கள்

1. வல்லெழுத்துக்கள் (வல்லின எழுத்துக்கள்) : க், ச், ட், த், ப், ற்
   கடினமாக ஒலிப்பவை.
2. மெல்லெழுத்துக்கள் : ங், ஞ், ண், ந்,ம்,ன்
3. இடையெழுத்துக்கள் : ய், ர், ல், வ், ழ், ள்

இடையின எழுத்துக்கள் : வல்லினத்திற்கும், மெல்லினத்திற்கும் இடையில் ஒலிப்பவை

Agaram Dhines

### சார்பெழுத்துக்கள்

உயிர் எழுத்துக்களும், மெய் எழுத்துக்களும் தவிர்ந்த உயிர்மெய் எழுத்துக்களும், ஆய்த எழுத்தும் சார்பெழுத்துக்கள் ஆகும்.

மெய் எழுத்தும் உயிரெழுத்தும் சேர்ந்து ஒலிக்கும் போது உயிர்மெய் எழுத்துக்கள் தோன்றுகின்றன.

க் + அ - க

க் + ஆ - கா

க் + இ - கி

க் + ஈ - கீ

க் + உ – கு

க் + ஊ - கூ

க் + எ – கெ

க் + ஏ – கே

க் + ஐ – கை

க் + ஒ – கொ

க் + ஓ – கோ

க் + ஔ - கௌ

### ஆய்த எழுத்து

இவ் எழுத்து எழுத்துகளுக்கு இடையிலேயே இடம் பெற்று சொல்லுருப் பெறுகிறது.

உ-ம் :- எஃகு, அஃறிணை, அஃது

### உயிர்க்குறிகள்

உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் சேரும்போது உயிர்க்குறிகள் தோன்றுகின்றன.

அவையாவன :

அரவு - ா - தா

விசிறி - ி - தி

சுழி - ீ - தீ

| | | |
|---|---|---|
| உயிர் எழுத்துக்கள் | = | 12 |
| மெய் எழுத்துக்கள் | = | 18 |
| உயிர்மெய் எழுத்துக்கள் | = | 216 |
| ஆய்த எழுத்து | = | 1 |
| மொத்தம் | = | 247 |

**எ. கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்கள் இருவகைப்படும். அவை எவை?

   …………………………………………………………………………………………..

2. முதல் எழுத்துக்கள் எத்தனை? அவை எவை?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

3. சார்பெழுத்துக்கள் எத்தனை? அவை எவை?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

4. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள மொத்த எழுத்துக்கள் எத்தனை?

……………………………………………………………………………………………

5. உயிர் எழுத்துக்களின் இரண்டு வகைகளையும் எழுதி அவற்றின் எழுத்துக்களை எழுதுக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

6. மெய் எழுத்துக்களின் மூன்று வகைகளும் எவை? அவற்றின் எழுத்துக்களை எழுதுக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

7. உயிர்மெய் எழுத்துக்கள் எப்படி உருவாகின்றன? உதாரணம் தருக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

Agaram Dhines

**ஏ. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுங்கள்.**

1. செங்கரும்பு = ………………………………………………
2. நற்செயல் = ………………………………………………
3. பாம்புப்புற்று = ………………………………………………
4. வானோங்கி = ………………………………………………
5. நீயொரு = ………………………………………………
6. பனையோலை = ………………………………………………

**ஐ. வாக்கியங்களில் தரப்பட்டுள்ள தடித்த எழுத்துச் சொற்களுக் குரிய எதிர்க்கருத்துச் சொற்களை வைத்து வாக்கியம் அமையுங்கள்.**

1. ஒவ்வொரு மனிதனுடைய **ஏற்றம்** அவனது நன்முயற்சியில் தங்கியுள்ளது.

……………………………………………………………………………………………

2. **ஏழைகள்** வாழ்வில் உயர்வு அடையவேண்டும்.

……………………………………………………………………………………………

3. **ஒற்றைக்** கால் பறவை அயல் நாட்டில் வாழ்வதாகக் கூறுகிறார்களா?

……………………………………………………………………………………………

4. பரீட்சை மண்டபத்தில் ஒருபோதும் **கலக்கம்** அடைதல் கூடாது.

…………………………………………………………………………………………..

5. நாம் **ஒற்றுமையுடன்** செயற்படுவோம்.

……………………………………………………………………………………………

6. **தண்ணீர்** எவ்வளவு குடித்தும் தாகம் அடங்கவில்லை.

……………………………………………………………………………………………

**ஒ. பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளி நிரப்புங்கள்.**

1. அவ் வில்லில் பூட்டிய………………….. ஒடிந்தது

   ……………………..அவ் ஊருக்குப் போனேன். (நாண், நான்)

2. என் கடன் அடியார்க்கு………………….. செய்து கிடப்பதே.

   ……………………..காலத்தில் குளிர் அதிகம். (பனி, பணி)

3. குயவன்……………………………..கொண்டு சட்டி வனைந்தான்.

   ……………………….செங்கோல் வளையாது அரசு செய்தல் வேண்டும். (மண், மன)

4. நாம் எந்த விடயத்திலும் ……………………….அறியாது தலையிடக் கூடாது.

   …………………….உயிரைக் கொல்லும். (ஆலம், ஆழம்)

**ஓ. கீழே தரப்பட்டுள்ளவற்றிற்குப் பொருத்தமான சொல்லை எழுதுங்கள்.**

1. ஆசிரியனுக்கு ஆசிரியை போல கணவனுக்கு …………………………………….
2. ஒருவன் ஒருத்தி போல உத்தமனுக்கு …………………………………………
3. மணமகன் மணமகள் போல திருவாளன் ………………………………………
4. வீரன் வீராங்கனை போல நங்கைக்கு …………………………………………
5. கடுவன் மந்தி போல காளை …………………………………………………..
6. பாற்காரன் பாற்காரி போல பிச்சைக்காரன்………………………………………